[1982 மார்ச் 11

திரு. செ. சிவசாமி : துணைத் தலைவர் அவர்களே, பனைப் பொருட்கள் தயாரிக்கும்போது அந்த ஓலை வெள்ளையாக இருப்பது சில நாட்களில் மங்கி விடுகிறது என்று கூறுகிறார்கள். அதற்காக ஆராய்ச்சி செய்து அந்த மங்காத வெள்ளை கலரிலேயே அது இருக்கும்படி செய்யப்படும் என்று சொல்லப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பனை ஓலை காய்ந்த பின்னர்தான் அந்தப் பொருள்களைத் தயாரிக்கிறார்கள். அதிலே கலரை மாற்றவோ கலரைக் கொடுக்கவோ போன்ற காரியங்களை வாரியம் செய்து கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலே தொப்பி போன்ற பொருட்களை அவர்கள் விரும்பி வாங்குகிறார்கள். விவசாயிகள் வெய்யில் நேரத்திலே வேலை செய்கிறபோது வெய்யில் அவர்கள் மீது படாமல் இருப்பதற்காக அகலமான தொப்பிகளைப் பயன்படுத்துகிறார்கள். அதுபோன்ற தொப்பிகளை தமிழ்நாட்டிலே உள்ள விவசாயிகளும் பயன்படுத்தினால் வெய்யிலிலிருந்து பாதுகாத்துக் கொள்வது மட்டுமல்ல, ஆரோக்கியத்துக்கும் நல்லது என்ற சூழ்நிலை இருக்கிறது. பாதுகாப்பிற்காகப் பயன்படுத்துகிறார்கள் ஆகவே மாற்றம் ஏற்படுவதாக இல்லை.

ஆ. உடுக்குறியிடாத வினாக்கள்

எண் 1—650 உடுக்குறியிடாத வினாக்களையும், அவற்றுக்கான விடைகளையும் இணைப்பில் காண்க.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்* முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்.

பேரவை நிகழ்ச்சிகளின் சுருக்க வெளியீடு.

திரு. வெ. இராஜசேகரன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேற்றைய விஷயம் நேற்றோடு முடிந்து விட்டது. அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1982 மார்ச் 11]

திரு. வெ. இராஜசேகரன் : நேற்று நான் சொன்ன விவரங்களை சபையிலே நீக்காமல், நாங்கள் வெளிநடப்பு செய்ததை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு என்ற அறிக்கையிலே நீக்கி இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெளி நடப்புகள் சுருக்க வெளியீட்டிலே எப்போதும் வந்தது இல்லை. சுருக்க வெளியீட்டில் அதைச் சேர்ப்பதும் வழக்கம் இல்லை, அந்தப் பிரச்சினையை இங்கு எழுப்ப வேண்டாம்.

[முற்பகல் 10.20]

திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நடக்கின்ற நடவடிக்கைகளைப் பற்றி செய்தித்தாள் என்ற குறிப்பில் தினம் அங்கத்தினர்களுக்கு அச்சடித்து அனுப்புகிறீர்கள்.

நேற்று 'சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தின் அருகில் திரு. இராஜசேகரன் அவர்கள் தாக்கப்பட்டது குறித்து, பல உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுத்தார்கள். நானும் என். எஸ். வி. சித்தன் அவர்களும் சேர்ந்து தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். நேற்று படிக்கும்போது என் பெயரைத் தாங்கள் விட்டு விட்டீர்கள் ? என்ன காரணத்தால் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்றே சேர்த்தாயிற்று.

திரு. கே. எம். தங்கமணி : துறை வெளியிட்டுள்ள 'செய்தித்தாளில்' என்னுடைய பெயர் இல்லையே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது 'டைப் மிஸ்டேக்'. அதை சேர்த்துக்கொள்ளலாம்

* * * * * *

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 54-வது விதியின் கீழ் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு மாத காலம் ஆகிறது. காலை பத்து மணிக்கு இங்கே தகராறு செய்பவர்களுக்குத்தான் கவன ஈர்ப்புக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் என்றால் எங்களைப்போன்ற உறுப்பினர்களின் நிலைமை என்ன ஆவது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சில நேரங்களில் அப்படியாகி விடுகிறது, என்ன செய்ய முடியும்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.